திரு. ஆ. நல்லசிவன் : இந்த வியாதியால் பாதிக்கப்பட்டவர்களை, திருநெல்வேலி மெடிக்கல் காலேஜ் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப் பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுமாதிரியான வியாதி திடீரென்று தோன்றி, குழந்தைகளுக்குப் பாதிப்பு ஏற்படுவதால், அவர்களுக்கு தாலுக்கா தலைநகரங்களில் உள்ள மருத்துவ மனைகளிலேயே சிகிச்சை அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : திருநெல்வேலி மருத்துவ மனைக்கு எடுத்துக்கொண்டு போவதன் மூலமாக டையக்னாசிஸ் செய்வதற்கு வசதியாக இருக்கும். இந்த வியாதியைப் பொறுத்த வரையில், தாலுக்கா மருத்துவமனையிலேயே சிகிச்சையைச் செய்யலாம். "சிம்டோமாட்டிக் ட்ரீட்மென்ட்" என்பது அலட்சியமாகச் செய்யப்படும் ட்ரீட்மென்ட் அல்ல. அது ஒரு ஒத்துக்கொள்ளப்பட்ட முறை. Symptomatic treatment is an accepted method of treatment. இதை எல்லா தாலுக்கா மருத்துவ மனைகளிலும் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. திருநெல்வேலி தலைமை மருத்துவமனைக்குக் கொண்டுவரப்படுமானால் பிரைய்ன் சிரோசிசை எடுத்து வைரோலஜி டிப்பார்ட்மென்ட்டுக்கு அனுப்ப வசதியாக இருக்கும். ஆனால் சிகிச்சையில் எந்தவிதக் குறைபாடும் இல்லை.

(2) அரசின் அனுமதியின்றி சென்னையில் டாக்சி, ஆட்டோ கட்டணத்தை அதன் ஓட்டுநர்கள் உயர்த்தியுள்ளது குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :

"அரசின் அனுமதியின்றி சென்னையில் டாக்சி, ஆட்டோ டிரைவர்கள், டாக்சி, ஆட்டோ கட்டணத்தை உயர்த்தியுள்ளதால் பொது மக்களுக்கு ஏற் பட்டுள்ள அவதி குறித்து."

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவையின் முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

@ 333 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அரசின் அனுமதியின்றி சென்னையில் டாக்சி, ஆட்டோ கட்டணத்தை அதன் ஓட்டுநர்கள் உயர்த்தி உள்ளது குறித்து

[1981 மார்ச் 25

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கட்டணம், மாற்றப்பட்ட கட்டணம். அதை எந்தத் தேதி முதல் அமுல்படுத்த வேண்டும் என்று அதிலே குறிப்பிடப்படவில்லை. எந்தத் தேதி முதல் இந்தக் கட்டணத்தை அமுல்படுத்த வேண்டும் என்று அரசு ஆணையிட்டிருக்கிறது ? 10—2—1981 அன்றிலிருந்தா அல்லது வேறு ஒரு தேதியிலிருந்தா ? மாற்றப் பட்ட கட்டணம் குறித்து ஆய்வு செய்வதற்காக, கருத்துக்களைக் கேட்பதற் காக 30—3—1981 அன்று ஒரு கூட்டத்தை நடத்தவிருப்பதாகக் குறிப்பிட் டிருக்கிறார்கள். இந்தக் கூட்டம் நடந்த பிறகு, இந்தக் கட்டணத்தை அமுல் படுத்த அரசு முடிவு செய்திருக்கிறதா ? காரணம், இப்போதே இந்தக் கட்ட ணத்தை ஆட்டோ, டாக்சி ஓட்டுநர்கள் கேட்கிறார்கள். அது மட்டுமல்லாமல், இந்தக் கட்டணத்திற்கு மேல் இருபது சதவீதம் கட்டணத்தைக் கூடுதலாக வாங்குகிறார்கள். இரவு நேரத்தில் 20 சதவீதம் கூடுதல் கட்டணத்தை வாங்கு வதற்கு அரசு அனுமதி தந்திருக்கிறதென்று அவர்களே சொல்லுகிறார்கள். இது குறித்தும் அமைச்சர் அவர்களின் விளக்கத்தைப் பெற விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பெட்ரோல் விலை உயர்வின் காரணமாக கட்டணம் மாற்றம் தேவையென்று கோரிக்கை வைத்தார்கள். அவர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே, அது நியாயம் என்று கருதிய அரசு இப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று இருக்கிறது. அதை யார் ஆதரிக்கிறார்கள், யார் எதிர்க்கிறார்கள் என்பதை அறிவதற்காக விவாதம் நடத்த 30—3—1981 அன்று ஒரு கூட்டம் நடத்தப்படவிருக்கிறது. அந்தக் கூட்டம் நடத்தப்பட்ட பின்புதான் இந்த மாற்றுக் கட்டணத்தை வசூலிக்க வேண்டும். அதற்கு முன்பு பழைய கட்டணம்தான் வசூலிக்கப்பட வேண்டும். இதை மீறி யாராவது புதிய கட்டணத்தை வசூலித்தால், அவரைப்பற்றித் தனிப்பட்ட முறையிலே குற்றச்சாட்டு கூறினால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். தனியாக 20 சதவீதம் வாங்க அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். 30—3—1981 அன்று விவாதித்து முடிவு எடுக்கப்படும். இங்கே கொடுத்தது முடிவு எடுக்கப்பட்ட கட்டணம் அல்ல. தவறாக வசூலித்தால் தண்டனை கொடுக்கப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவையில் இல்லை. செல்வி லீலாவதி.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் எழுந்து நின்றார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒரே கட்சியைச் சேர்ந்த மூன்று நான்கு பேர் கொடுத்திருந்தால், ஒவ்வொருவரும் இரண்டு கேள்விகள் கேட்டால் எப்படி ? குறிப்பாக ஆசிரியர் பற்றிய கேள்வி வந்தால், ஆசிரியர் தொகுதியில் நாங்கள் தனித்தனி என்று தனித்தனியாகக் கேட்கிறார்கள். ஒரு கட்சி சார்பிலும் அனுமதி வேண்டுமென்று கேட்கிறார்கள். எப்படி அனுமதிக்க முடியும் ? மூன்று, நான்கு பேர் அறிவிப்பு கொடுத்திருந்தால், ஒரு கேள்விதான் கேட்கமுடியும். ஆகவே செல்வி லீலாவதி கேட்கலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, இது கட்சி சார்புடையதல்ல. பொதுவான பிரச்சினை என்பதைத் தலைவர் அவர்கள் உணர வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நாம் ஒருமுறையைக் கடைப்பிடிக்கா விட்டால், எப்படி அவையை நடத்த முடியும்? "என்னை மட்டும் மூன்று முறை கேட்க அனுமதிக்க வேண்டும்" என்று உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். விசேஷமாக அனுமதிக்கிறேன். ஆனால், இதையே மரபாக ஏற்றுக் கொள்ள முடியாது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : 30—3—1981 அன்று கூட்டம் நடந்த பிறகு அமுல்படுத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எல்லா டாக்சி, ஆட்டோ ஓட்டுநர்களும் ஒரு அச்சடித்த அட்டையை வைத்துக்கொண்டு அதற்கு ஒப்புதல் அளித்துவிட்டார்கள் என்று அவர்கள் பகிரங்கமாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். குறிப்பிட்ட ஒரு சில இடத்தில் நடந்தால், அமைச்சரிடம் சொல்லலாம். இதற்கு விதிவிலக்கே கிடையாது. எல்லா இடத்திலும், எல்லோரும் அச்சடித்த அட்டையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்ற பிரச்சினை இதிலே எழவில்லை. எனவே இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போல மீட்டர்களிலும் தில்லுமுல்லு நடக்கிறது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. மீட்டர்களில் தில்லுமுல்லு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இப்போது அச்சடித்த அட்டையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது யார் அச்சடித்த அட்டை என்று பார்க்க வேண்டும். அரசாங்கம் அச்சடித்துக் கொடுக்க

வில்லை. ஆகவே அப்படிக் கொடுக்கக் கூடாது என்பதில் பொது மக்கள் ஆதரவு இருந்தால், நாம் நடவடிக்கை எடுக்கலாம். மாற்றப்படும் வரையில் வசூலிக்கக் கூடாது என்றும், அப்படித் தவறு நடந்தால் நிச்சயமாகக் கடுமை யான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதிகாரிகளிடம் சொல்லியிருக்கி றோம். இந்தக் கருத்தை அடிப்படையாக வைத்து மீண்டும் சொல்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீட்டரைப் பொறுத்தவரையில், அடிக்கடி இப்படி கட்டண மாற்றம் ஏற்படுகிற காரணத்தால், ஒவ்வொரு முறையும் மீட்டரை மாற்ற முடியவில்லை என்ற தன்மை இருக்கிறது. மீட்டர் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் சொந்தமாக வைத்துக்கொண்டு, அரசாங்கத்தின் மூலமாக அனுமதி வாங்கி மீட்டர் வேலை செய்ய வேண்டும் என்று நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நாளைய தினத்திலிருந்து கொஞ்சம் கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு குறிப்பிட்ட தேதியிலிருந்து அந்தப் பிரச்சினைகள் இல்லாமல் போகும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

செல்வி அ. லீலாவதி : தலைவரவர்களே, பொதுவாகக் காவல் துறைக்கும், போக்குவரத்துத் துறைக்கும், இதைக் கண்காணிக்க, அறிவுரை வழங்கப்பட் டுள்ளது என்பதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அரசு கடுமையாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். ஏனென்றால், பெண்கள் தனி யாக ஆட்டோ, டாக்சியில் சென்றால், அவர்களை மிரட்டி இந்த அட்டையைக் காண்பித்து அதில் உள்ள தொகையைக் கொடுத்தாக வேண்டுமென்று ஆட்டோ, டாக்சி டிரைவர்கள் கேட்கிறார்கள். இல்லையென்றால் வாக்குவாதம் செய்கி றார்கள். ஆகவே, இந்தத் துறை உடனடியாக அப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் ஒரு சட்டத்தை அமுல் படுத்த வேண்டும். இந்த மாதிரி நடந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களுடைய லைசென்சைப் பறிமுதல் செய்ய, திரும்பப் பெற அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, தவறுகள் சில இடங் களிலே நடந்திருக்கின்றன. ஆனால், இவை இப்போது ஏற்பட்ட தவறுகள் அல்ல. பன்னெடுங்காலமாக இத்தகைய தவறுகளைச் செய்துகொண்டிருக்கி றார்கள். இதிலே ஒரு முடிவு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான், அவர்களுக்கும் நஷ்டம் ஏற்படாத வகையில் கட்டுப்படியாகக் கூடிய கட்ட ணத்தை, மாற்றியமைக்கிறோம். அதற்குப் பிறகும் இந்தத் தவறுகள் நடந் தால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடு செய்திருக் கிறோம்.

30—3—1981 அன்று கூட்டம் நடந்த பிறகு என்ன செய்யலாம் என்று இருக்கிறோம் என்றால், யாராவது அதிகமான கட்டணத்தைக் கேட்டால், அவர்களுடைய வண்டியின் உரிமம், ஓட்டுநருடைய உரிமம் ஆகியவற்றை இரத்து செய்ய வேண்டும் என்றும், ஓட்டுநர் இடத்திலே ஒருவர் செல்லுவதற்குப் பதிலாக இரண்டு பேர் சென்றால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இருக்கிறோம். இப்படிப்பட்ட பல குறைபாடுகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். மூன்று மாத காலம் அவகாசம் கொடுத்தால், பெரிய மாற்றத்தை ஏற்படுத்திக் காட்ட முடியும் என்பதை உத்திரவாதமாகச் சொல்லிக்கொள்ள முடியும்.

(முற்பகல் 10-30)

5. 1980-81 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த இறுதி துணை விவர அறிக்கையின் மீது விவாதம்.

* திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, இந்தத் துணை விவர அறிக்கையின் மீது பேசும்போது நான் ஒரே ஒரு பிரச்சினையைப்பற்றி மட்டுமே பேச விரும்புகிறேன். இந்தத் துறை செயல்படுவதிலே முக்கிய பங்கு வகிக்கக்கூடிய ஊழியர்கள் பற்றிய பிரச்சினையாகும் இது, நான் இந்த சபையின்மூலம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு இப்பிரச்சினையை கொண்டு வர விரும்புகிறேன். இந்த நேரத்தை அந்த ஒரு பிரச்னைக்கு மட்டுமே பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். 1980 பிப்ரவரியில், ஜனாபதி ஆட்சி ஏற்பட்டபிறகு கருவூலத் துறையிலே இருக்கின்ற ஊழியர்கள மாநில அளவில் ஸ்ட்ரைக் செய்தார்கள். அவர்கள் வேலை செய்யக்கூடிய அலுவலகங்களில் சிப்பந்திகள் அதிகம் தேவை என்று கோரி ஸ்ட்ரைக் செய்தார்கள். வேலை அதிகமாக இருப்பதால் மேற்கொண்டு சிப்பந்திகள் தேவை என்று கோரிக்கை வைத்திருந்தார்கள். அது பல வருடங்களாகக் கொடுக்கப்படாமல் போனதால் மார்ச்—எப்ரல் மாதத்திலே ஒரு ஸ்ட்ரைக் நடந்தது. அந்த ஸ்ட்ரைக் 8 தினங்கள் நடந்தது. அந்த ஸ்ட்ரைக் நடைபெற்ற பின்னால். நிதித் துறை அதிகாரிகள் கோரிக்கையின் நியாயத்தை ஒப்புக் கொண்டு போதுமான அதிக ஆட்களைத் தந்தார்கள். இந்தப் பிரச்சினை வேலை நிறுத்தத்தின் மூலம் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துவிட்டதால், அந்த அரசு ஊழியர்களை, சில கருவூலத்துறை அதிகாரிகள் பழிவாங்குகின்ற நிலையில் காரியங்களைச் செய்திருக்கின்றார்கள். அதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஸ்ட்ரைக் நடவடிக்கைகளின் மதுரையில் முக்கியமான பங்கு கொண்ட திரு. நல்லக்கண்ணு என்ற ஊழியரை எந்த ஒரு காரணமும் இல்லாமல் அதிகாரிகள் கோயம்புத்தூருக்கு மாற்றியிருக்கிறார்கள். இதை ஆட்சேபித்து, மதுரையில் உள்ள ஊழியர்கள்